**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,திண்டுக்கல்**

**அமர்வு வழக்கு எண்.54/2022**

**அ.சா. -6-(LW6)- பிரேம்குமார்**

**நாள்.31.01.2024**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.**

**3ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கில் இறந்து போன கருப்பையா எனது நண்பர். அவரை நான் மருத்துவமனையில் பார்த்துவிட்டு தான் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க சம்பவ இடத்திற்கு போனேன் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் யார் யார் இருந்தார்கள் என்றால் 2 போலீசார்கள் இருந்தார்கள். நான் சுமார் இரவு 10.00 மணிக்கு சென்றேன் என்றால் சரிதான். அந்த இடத்தில் மின் விளக்கு எதுவும் இல்லை என்றால் சரிதான். பார்வை மகஜரை யார் எழுதினார்கள் என்று பெயர் தெரியாது. போலீஸ்காரர் எழுதினார். அதில் என்ன எழுதி உள்ளது என்று தெரியாது.

**1 ,2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் என்னை எப்பொழுது விசாரித்தார்கள் என்றால் என்னை விசாரிக்கவில்லை. சம்பவ இடத்தில் தயார் செய்யப்பட்ட வரைபடத்தில் நான் கையொப்பம் செய்தேன். சம்பவம் நடந்த இடத்தை பற்றிய அனைத்து விபரமும் தெரியும் என்றால் சிலுவத்தூர் போகும் வரை மட்டும் தெரியும். நான் திண்டுக்கல் வந்துவிட்டு தான் சம்பவம் இடம் சென்றேனா என்றால் சரிதான். மாலப்பட்டி ரோடு என்பது தெரியுமா என்றால் தெரியும். மாலப்பட்டி பிரிவில் இருந்து கிழக்கு பக்கம் போனால் சிலுவத்தூர் சாலை என்றால் சரிதான். மேற்கு பக்கம் திண்டுக்கல் ரோடு என்றால் சரிதான். வரைபடத்தில் மாலப்பட்டி பிரிவில் இருந்து மேற்கு பக்கம் சென்றால் திண்டுக்கல் ரோடு உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மாலப்பட்டி பிரிவில் ஒரு தரைப்பாலம் உள்ளது என்றால் சரிதான். என்னை போலீசார் கையொப்பம் செய்ய சொன்னதான் பெயரில் கையொப்பம் போட்டேன் என்றால் நான் அந்த இடத்திற்கு போன போது போலீசார் அங்கே வரைபடம் மற்றும் மகஜர் எழுதிக்கொண்டு இருந்தார்கள் அதனால் கையொப்பம் செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.ஆ. 2 வரைபடம் தான் போலீசார் அங்கே தயார் செய்து கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். நானும்

மகுடீஸ்வரனும் உறவினர்கள் இல்லை என்றால் சரிதான். நான் வசிப்பது ஆவரம்பட்டி, மகுடீஸ்வரன் வசிப்பது சித்தையன்கோட்டை என்றால் சரிதான். நானும் மகுடீஸ்வரனும் வேறு வேறு வேலை பார்க்கிறோம் என்றால் சரிதான். மகுடீஸ்வரன் என்னுடைய நண்பர் என்று பொய்யாக சாட்சி சொல்ல வந்தேன் என்றால் சரியல்ல. சம்பவத்தை பற்றி யார் என்னிடம் சொன்னார்கள் என்று கூறிப்பிட்டு தெரியாது.

**மறுவிசாரணை – இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN

Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2024.01.31 18:35:36 +0530

Additional District Judge,

Dindigul.